**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.182/2025**

**நாள் : 17.07.2026**

**எ.ம.சா.** 1 (2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மருதாச்சலம் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.கோவிந்தராஜ் | வயது | : | 33 |
| ஊர் | : | திருப்பத்தூர் | தொழில் | : | இளநிலை உதவியாளர் |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

**முதல் விசாரணை**

நான் வட்டார போக்குவரத்து அலுவலத்தில் இளநிலை உதவியாளராக பணி புரிந்து வருகிறேன். அழைப்பாணையுடன் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை கிடைக்கப்பெற்று அனுமதி கடிதத்துடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அனுமதி கடிதம் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்கிறேன். ரெட்டியூர் கிராமம், ஜோலார்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டம் என்ற விலாசத்தில் உள்ள தினேஷ் த/பெ பெருமாள் என்பவருக்கு விபத்து தேதியில் ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்று சாட்சியம் அளிக்க வந்த அழைப்பாணை கிடைக்கப்பெற்று கணிணியில் தேடி பார்த்ததில் எந்த ஓட்டுநர் உரிமம் இல்லை என்று தெரியவந்தது. இந்த விலாசம் திருப்பத்தூர் மாவட்டத்தில் தான் உள்ளது. வேறு எந்த மாவட்டத்தில் உரிமம் பெற்றிருந்தாலும் கணிணியில் தேடும் போது தெரியவரும். அவ்வாறு தேடியும் ஓட்டுநர் உரிமம் காணப்படவில்லை என்று ஆய்வாளர் சான்று அளித்துள்ளார். அந்த சான்று எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்கிறேன். 2018 ல் இருந்து அனைத்து வட்டார போக்குவரத்து அலுவலகங்கள் கணிணியில் இயங்குகின்றன. 2018 முன்பு பெறப்பட்டு இருந்து உரிமங்களையும் கணிணியில் பதிவு செய்துள்ளோம்.

**<u>மனுதாரரின் குறுக்கு விசாரணை</u>**

தினேஷ்யின் ஓட்டுநர் உரிமம் சமர்பிக்கபடவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தினேஷ் வேறு விலாசத்தில் உரிமம் பெற்றிருந்தால் அதை தேட முடியுமா என்றால் வாய்ப்பில்லை. அதனால் விபத்தன்று தினேஷ்க்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று கூறுவது பொய்யானது என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.